விக்னா
ரியூசன் சென்ரர்
A/L 91
DAY CLASS
8.00 - 2.00
ஆரம்பமாகிவிட்டன
வாரத்தில் 5 நாட்களும்
எமது தனித்துவம் வாய்ந்த
ஆசிரியர் குழுவால் போதிக்கப்படுகிறது.

பக்கங்கள் எட்டு — விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 94 வியாழன் 10-05-1990 (சித்திரை 27) ஷவ்வால் 14

விக்னா ரியூசன்
சென்ரர்
யாழ்ப்பாணம்
O/L Dec 1990
பிரிவு 1 Day Classes
(8.30-1.00)
பிரிவு 2 Sat, Sun
Classes (8.00-2.00)
பிரிவு 3 Evening
Classes (4.00-6.00)

★ தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இலங்கை அரசிலிருக்கும்

# பேச்சுக்களால் பிரச்சனைகள் தீரும் என்ற நம்பிக்கை அற்றுவிட்டது!

## மக்கள் மனதில் ராணுவ பயமுறுத்தல் இருப்பது தெளிவாகத் தெரிகிறது - வவுனியா தினேஸ்

(வவுனியா)

இன்று வியாழக்கிழமை வவுனியாவில் இடம்பெறவிருந்த சமாதான ஊர்வலம் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. என். தினேஷ் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாம் போராட்ட சக்தி அற்றோசாவுக்கு பயந்தோ பேச்சு வார்த்தைக்கு செல்லவில்லை.

அமைதி சமாதானம் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் எங்களுடைய போரட்டம் சிங்கள மக்களுக்கோ பௌத்த மதத்திற்கோ எதிரானவை அல்ல.

ஒவ்வொருமக்களுடைய உணர்வுகளையும் உரிமைகளையும் மதிப்பவர்கள் நாம் என்றும் விரும்பி நிற்பது ஒரு உண்மையான அமைதி, சமாதானம் ஏற்படவேண்டும் என்பதற்கே சமாதானம் என்பது மேடைப் பேச்சுகளாகவே அல்லது ஊர்வலங்களாகவே ஏற்படுத்துவது அல்லது உளப்பூர்வமாக செயல் ரீதியாக மக்கள் மனதில் வளர்க்கப்பட வேண்டிய நிகழ்வானது.

இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சமாதானத் திற்கான ஒரு தெளிவான சிந்தனை ஏற்படுத்தப்படவில்லை.

ஆயுதங்கள் ஊடாகவே இப்பிரச்சனைக்கு தீர்வுகாண

← 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் தொழில் நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள் பற்றாக்குறை

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில்போதனாகிரியர்களின் பற்றாக்குறையினால் விரிவுரைகள் பாதிப்படைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் போதனாசிரியர்கள் சேர்க்கப்பட்ட போதும் தேவைக்கேற்றதாக நிறைவு செய்யப்படவில்லை.

தற்போது நடைபெற்று வரும் பயிற்சி நெறிகளுக்கு

— 8ஆம் பக்கம் பார்க்க

## பணத்தகராறு சித்தப்பா சுட்டு பெறாமகன் ஆஸ்பத்திரியில்

மல்லாவி 6-ம் கட்டை என்னும் இடத்தை சேர்ந்த கதிரவேலு செல்வரெத்தினம்(17) என்பவர் சூட்டுக்கு இலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கும் இவரது சித்தப்பாவுக்கும் ஏற்பட்ட பணத்தகராறு காரணமாக சித்தப்பா ஒழிந்து நின்று வேட்டைத் துவக்கால் இவரை சுட்டதாக தெரியவந்துள்ளது.(4)

ஜனசக்தி முத்திரை இழந்தோர்

## கிராமசேவகர் காரியாலயம் மீது நள்ளிரவில் கல்வீச்சு

(பூநகரி)

இரணைதீவு கிராமசேவை அலுவலர் காரியாலயத்தின் மீது நள்ளிரவு நேரத்தில் சில விஷமிகளால் சரமாரியாக கல் வீசப்பட்டதாகவும் தான் எழுந்துகுரல் கொடுக்கஅவர்கள் ஓடிவிட்டதாகவும்உதவிஅரசாங்க அதிபரிடம் கி.சே.அலு

← 8ஆம் பக்கம் பார்க்க

## நேற்று ரயில்முன் விழுந்து தற்கொலை செய்த இளைஞன்

நேற்றுக்காலை 7.15 மணியளவில் யாழ்தேவி ரயில்முன் இனம்தெரியாத நபர் ஒருவர் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார். இச்சம்பவம் கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள புகையிரதக் கடவையில்இடம் பெற்றது.

இவர் 40 வயது மதிக்கத்தக்க கறுத்த நிறமுடைய5அடி 5அங்குலம் உயரமுடையவர்.

... 8 ம் பக்கம் பார்க்க



பெண் போராளிகளுடன் ஒரு சந்திப்பு
உள்ளே.... 6-ம் பக்கத்தில்

## காணாமல்போனதமிழகமீனவரை மீட்க தமிழ்நாடு அரசு முயற்சி

(சென்னை)

தமிழகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்று கடலில் காணாமல் போன தமிழக மீனவர்கள் குறித்து நேற்று தமிழ் நாடு சட்டப்பேரவையில் விவாதிக்கப்பட்டது.

காணாமல் போன மீனவர்கள் பற்றி எதிர்கட்சியினர் கேள்விகளை எழுப்பியபோது அதற்கு பதிலளித்து பேசிய

— 8ஆம் பக்கம் பார்க்க

## ஒருகுடம் குடிதண்ணீர் 2ரூபா

புங்குடுதீவில் ஒரு குடம்குடி தண்ணீர் இரண்டு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது வேலணை சாட்டிப் பகுதியில்இருந்துஉழவுஇயந்திரங்கள் மூலமாக குடிதண்ணீர்கொண்டுவரப்பட்டு தரகர்கள் மூலம் இவ்வாறு விற்கப்படுகின்றது,

இலாப நோக்கத்தை யடிப்படையாக கொண்டு செய்யப்படும் இவ் விற்பனையில் ஒருகலன் தண்ணீர் 75 சதத்திற்கு விற்கப்பட்டு வருகின்றது(19),

## கிராம சேவகர்கள் இல்லாது பல பகுதி மக்கள் அவதி

யாழ் மாவட்டத்தில் உள்ள பல மக்கள் கிராமசேவையாளர் இன்றி அலைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் 208 புதிய கிராம சேவை அலுவலகர் பிரிவுகள் பிரிக்கப்பட்ட போதும் அவற்றில் சுமார் 50 பிரிவுகளுக்கு இன்னமும்கிராம சேவையாளர்கள் நியமிக்கப்படவில்லை.

— 8ஆம் பக்கம் பார்க்க

## பேராதனை ஆங்கில ஆசிரிய கலாசாலையில் பயிலும் வடகிழக்கு ஆசிரியர்களின் அவல நிலை

பேராதனையில் ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை மேற் கொண்டு வரும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழ் ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு உள்ளாகிவருவதாக அறியமுடிகின்றது.

இவ் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலப் பயிற்சி மட்டுமே நடை பெற்று வருகின்றது. ஆனால் சில சமயங்களில் சிங்கள மொழியில் விஷேட விரிவுரைகள் நடாத்தப்படுவதாகவும். இதனால் சிங்களம் புரியாத தமிழ் மாணவர்கள் சங்கடத்திற்கு உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

இவ்விடயம் சம்பந்தமாக மேற்படி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றுவரும் ஆசிரியர் ஒருவர் அங்கு நடை பெற்று வரும் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில் தாம் ஆங்கில ஆசிரியர்கள் என்பதால் எல்லா விதமான விரிவுரைகளும் ஆங்கில மொழி மூலம் நடைபெற்று வருகின்றன. ஆனால் பெரும்பாலான சிங்கள மாணவர்களுக்கு ஆங்கில அறிவு குறைவாக இருப்பத

— 8ஆம் பக்கம் பார்க்க

## சிறுவிளம்பரம்


### புத்தகம்

பல்தெரிவு வினாக்கள் மூலம் பொது இரசாயனமும் பௌதிக இரசாயனமும் (G.C.E.A/L வகுப்புக்குரியது.) by ம.செல்வரத்தினம்B.Sc இராஜேஸ்வரிமகேஸ்வரன்B,Sc.A/L (physics) பரீட்சைக்குரிய மிக முக்கிய தகவல்களை உள்ளடக்கிய. துவிலை ரூபா 75 வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 0504ε


# ஜோசப் பாலாவின் 'திருப்பம்' நூல் வெளியீட்டு விழா

ஜோசப் பாலாவின் 'திருப்பம்' சிறுகதைத் நொகுதி நூல் வெளியீட்டு விழா 12-ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கவிஞர் யாழ்.ஜெயம் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு விழாவில் அருட்திரு கில்லறி ஜெபநேசன் ஆசியுரை வழங்குவார். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு.டிவகலாலா வெளியீட்டுரையும், கலாநிதி சவரிமுத்து அடிகள் மற்றும் செங்கை ஆழியான் ஆகியோர் கருத்துரையும் வழங்குவர்.

யாழ்.மாநகர ஆணையாளர் வே.பொ. பாலசிங்கம் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

# தோல்புரம் விவசாயிகளுக்கு உரம் தாராளமாகக் கிடைக்கும்

(சங்கானை)

தொல்புரம் கமநலச் சேவை நிலையத்தில் யூரியா, ஆகிய உர வகைகள் விவசாயிகளுக்கு கட்டுப்பாட்டு விலையில் வழங்குவதற்கு போதுமான அளவு கையிருப்பில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக நேரங்களில் விவசாயிகள் தமக்கு தேவையான மேற்படி உர வகைகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட யாழ்ப்பாண ரக மண்வெட்களும் இங்கு சகாய விலையில் விற்பனைக்கு இருப்பதாகவும், நான்கு இறாத்தல் நிறையுள்ள மண்வெட்டியை 325 ரூபாவாக வாங்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (13)

# இவர்களுககு வேதனம் இல்லை

(பளை)

கிளிநொச்சியிலிருந்து எழுதுமட்டுவாழ் வரையுள்ள புகையிரதக் கடவை காவலாளர்களுக்கு உரிய காலத்தில் வேதனம் கிடைப்பதில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய பகுதியிலுள்ள வர்களுக்கு மாதாமாதம் இருபதாம் திகதியே வேதனம் கிடைத்து விடுகிறதெனவும் தெரிவிக்கப்பட்டது.(ப 3.)

### வ. பி போ. சபையில்

# ஒருவருடமாகியும் ஒப்பந்த ஊழியர் நிரந்தர மாக்கப்படவில்லை

(மண்டைதீவு)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும், அமைய, ஒப்பந்த அடிப்படையிலான சாரதி, காப்பாளர்கள் ஒரு வருடகாலத்திற்கு மேலாகியும் இன்னும் நிரந்தரமாக்கப்படவில்லை.

இதனால் இவ்வூழியர்கள் பல சலுகைகளை இழந்து வருவதோடு சம்பளமற்ற விடுமுறையே வழங்கப்படுகிறது.

ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியகர்ளுக்கு விபத்து ஏற்படும் பட்சத்தில் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதில்லை இதனால் இவ்வூழியர்கள் பொருளாதாரக் கஷ்டம் உட்பட்ட பல பாதிப்புக்களுக்கும் ஆளாகின்றனர்.(12)


# தொழிற் பயிற்சிகள்

★ **றேடியோ ரெலிவிசன், வீடியோடெக் றிப்பியறிங்**
ரெலிவிசன், றேடியோ. வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்:— 4 மாதம்

★ **ஏயர் கொண்டிசனிங்**
குளிர்சாதனப்பெட்டி, ஏயர் கெண்டிசன் திருத்தப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்.
காலம்:-- 4 மாதம்

★ **றீவைண்டிங்**
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர், ஆமேச்சர் றீவைன்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:– 3 மாதம்

★ **எலக்ரிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:-- 2 மாதம்

★ **Spoken English**
ஒருமாத முழுநேர வகுப்பு நடாத்தப்படும்.

★ **Hotel Management**

மீண்டும் ஆரம்பம் 11.05.1990 (கிழமை நாட்கள்)
12.05.1990 (சனி, ஞாயிறு)

விபரங்களிற்கு

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ரெயில்வே கடவையருகாமை)
05073

**மீணடும தையல பயிற்சி ஆரம்பம**

லேன் மோர் லேடீஸ் டெயிலறிங் இன்ஸ்ரிரியூட் டில் புதிய மாணவிகட்கு அனுமதி கோரப்படுகின்றது.

தொடர்பு:
முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம்
05082

**விற்பனைக்கு**

தேவர்கள் அமிர்தம் கடைந்தபோது பாற்கடலில் வெளிவந்த அமிர்தம், மகாலக்ஷ்மி அஷ்ட வசுக்கள் இவற்றுடன் வெளிவந்த சங்கு பூசைக்கு மிக வேண்டிய சாதனமாகும். வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்து ஆராதிப்பதால் சர்வ சௌபாக்கியங்களும் பெருகிச் சுபிட்சம் தாண்டவமாடும். கோயில் தேவைகட்கு ஏற்ற அளவுகளில் சலுகை விலையில் உடன்தொடர்புகொள்க. T. உருத்திரகோடீஸ்வரக் குருக்கள், கோவில் வீதி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. 05056

முரசொலி அனுசரணையுடன்
வவுனியா-புதுக்குளம்
சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
12-வது வருடாந்த
விளையாட்டுப் போட்டி

**115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டிக்குரிய விண்ணப்பம்**

முழுப்பெயர்........................................................

விலாசம்..............................................................

மாவட்டம்...........................................................

அதிர்ஷ்ட இலக்கம்.............................................

போட்டியால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்குக் கழகம் பொறுப்பாளி அல்ல என்பதினை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி　　　　விண்ணப்பதாரியின் ஒப்பம்

இந்தச் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 17. 05. 90க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கழகச் செயலாளர், சித்தி வினாயகர் விளையாட்டுக்கழகம், புதுக்குளம்,சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

# உதவித் தாதியர் பயிற்சிநெறி

## TRAINING FOR NURSES - AIDE

**19-05-1990-இல் ஆரம்பமாகவுள்ளன**

- ✶ தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N, O.) விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன.
- ★ பதினெட்டு மாத கால பாடத்திட்டங்கள்.
- ✶ ஆறுமாத கால செய்முறைப் பயிற்சிகள்
- ✶ செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ். நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்திய சாலையில் நடைபெறுகின்றன.
- ✶ அரச அங்கீகாரம்பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்,
- ✶ பாடத்திட்டங்கள் யாவும் தமிழ்மொழி மூலம் போதிக்கப்படுகின்றன.
- ★ இலவச ''அக்கு பங்சர்'' பயிற்சிகள்.

ஆண் உதவித்தாதியர் பயிற்சிக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

உங்கள் பதிவுகட்கு

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
05079

**சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வரைவுள்ளது)**
**சுனனாகம**

## அரிசியாலையில் ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்வதற்கான கேள்வி

எம்மால் சுன்னாகம் மின்சார நிலையத்திற்கு அருகாமையில் நடாத்தப்படும் அரிசியாலையில் ஒப்பந்த அடிப்படையில் கூலி வேலை செய்வதற்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

வேலை விபரங்களையும், கேள்விப் பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவங்களையும் வேலை நாட்களில் எமது காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி - 25 . 05 . 90**

**பொது முகாமையாளர்**

சுன்னாகம் பல நோ.கூ. சங்கம்
சுன்னாகம்
07. 05. 90

05080

# இதயநாதம்

வியாழக்கிழமை 10-05-1990

நலவாக்கு

எல்லாவற்றிற்கும் மேலாக உன் இருதயத்தைக் காப்பாற்றிக்கொள். அதனின்று தான் ஜீவ ஊற்றுக்கள் கிளம்புகின்றன.

-பைபிள்

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

## அம்பாறை மாவட்டம்

தமிழ் பிரதேசத்தைத் துண்டாடி சிதைப்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் அம்பாறை மாவட்டம்.

இங்கே பெருந் தொகையான தமிழ் பேசும் முஸ்லிம்களும், தமிழர்களும் வசிக்கின்றனர்.

இத்தனை பேர் இருந்தும் இவர்களுக்கென்று ஒரு தமிழ் கிராமசேவகர் கூட இங்கே இல்லை என்பது கவலைக்குரிய விடயம்.

இதனால் இப் பகுதித் தமிழ் மக்கள் அடையும் அலைச்சல் கொஞ்ச நஞ்சமல்ல.

நிவாரணம் போன்ற அரச உதவிகளைக் கூட இவர்கள் இலகுவில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

கிராமசேவகர்கள் இல்லாததால் இவர்கள் அரசுடன் எதுவிதத் தொடர்பையும் வைத்துக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

அம்பாறைக் கச்சேரி உட்பட சகல அரச அலுவலகங்களிலும் அங்கே தனிச் சிங்களத்திலேயே கருமங்கள் நடைபெறுகின்றன.

அரச கரும மொழியாகத் தமிழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்பும், 12 வருடங்களாக தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு ஒன்று இயங்கி வந்ததும்,

தமிழ் மக்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் தமிழில் கருமங்கள் ஆற்றப்படவில்லை என்பதும் வேதனைக்குரியது.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் வசிப்பதற்குக் காணிகள் வழங்குவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசம் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்ற இந்நிலையில் தமது பாரம்பரியப் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம்களுக்கு உரிமைகள் மட்டுமன்றி உறுதிகளும் மறுக்கப்படுகின்றன.

அம்பாறையில் எந்தவொரு தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் புதிதாகக் காணியோ, வழங்கிய காணிகளுக்கு உறுதிகளோ வழங்க அரச அதிகாரிகள் பின்நிற்கிறார்கள்.

அரச அதிகாரிகளுக்கு ஓர் உயர் அரசியல் புள்ளியே மேற்படி தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இதே சமயம் வடக்கு கிழக்கு மாகாண சபை ஆரம்பிக்கப் பட்டு ஒன்றரை வருடங்களாகி விட்டது.

இன்னமும் அம்பாறை மாவட்டம் வடகிழக்கு மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் எதிரொலியாக வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்ய அரசாங்கம் விரும்பவில்லையா என்ற வினா எழுந்துள்ளது.

அம்பாறை விடயத்தில் தமிழ் மக்களும், தமிழ் அமைப்புகளும் மிகவும் தீவிரமாக இருக்க வேண்டியது அவசியம்.

அம்பாறை மாவட்டம் போன்றே வெலிஓயா அமையப்போவது என்பது ஓர் எச்சரிக்கையாகும்.

அம்பாறையில் நடப்பது நீடிப்பின், வெலிஓயாதான் அரசின் அடுத்த கட்ட களமாகும்.


வெலிஓயாவை ஓர் தனி மாவட்டமாக அரசு பிரகடனப்படுத்தினால் அதன் நிர்வாகமும் அம்பாறை போலாகிவிடும்.

எனவே ஆரம்பத்திலேயே அம்பாறையில் அரசு நடத்தும் மறைமுக இனவாத நடவடிக்கையை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டியது எமது கடமையாகும்.

# 794 இலக்க பஸ்சேவை அடிக்கடி மக்கர்!

# காசைக் கொடுத்து கஷ்டப்படுவது மக்கள்!!

''794 இலக்க பஸ்ஸை... நம்பி நிக்கேலாது ... ஒரு நாளைக்குஓடும் .. திடீரென்டு ஓடாம நிக்கும் சிலநேரம் பின்நேரம்4.30க்குப்போகும் .




இல்லாட்டி 5 மணிக்கு போகும் ... இந்த பஸ்சை ... நம்பி நிண்டா ... நடுத்தெருவிலதான் நிற்க வேண்டி வரும்...''

கனகன்புளியடிச்சந்தி ஊடாக கொடிகாமத்திற்குச் செல்லும் பஸ்வண்டியில் பயணம்செய்யும் பிரயாணி ஒருவரின் வேதனை வார்த்தைகள்தான் இவை.

எமது அலுவலகத்திற்கு தினமும் பல பிரச்சனைகள் பற்றி கடிதங்கள் வருகின்றன.

### இதில் போவது சங்கடம்

இக்கடிதங்களில் கனகன் புளியடி ஊடாக கொடிகாகமம் செல்லும் (794-ம்இலக்க) பஸ் பற்றிய கடிதம் எம் கவனத்தைக்கவர்ந்தது.

நாம் இதுபற்றி பல முறை செய்தி வெளியிட்டிருந்தோம். வாசகர்களின் கடிதங்களையும் 'முரசொலிக்கு வந்த கடிதம்' என்ற பகுதியிலும் பிரசுரித்திருந்தோம். எதுவித பலனையும் இதுவரை காணவில்லை,

யார் மீதும் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தவேண்டும் என்பதற்காக இக்கட்டுரை எழுதவில்லை. இது ஓர்சமூகப் பிரச்சினை. மனிதாபிமானமாக நோக்கவேண்டிய பிரச்சினை என்பதாலே எழுத முனைகின்றோம்.

நாம் உண்மைகளை வெளிப்படுத்துவதால்... கசப்பான அனுபவங்களை சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம் இருந்தாலும் பத்திரிகைத் தர்மத்தைக் கடைப்பிடித்து நடுநிலை நின்று எழுத முனைகிறோம் உண்மைகள்...சற்றுகசக்கவே செய்யும்...அதற்காக.. ஒதுங்கிவிட முடியாது...

மட்டுவில் சரசாலை கனகன்புளியடி மந்துவில் வேம்பிராய் ஆகிய பகுதிகளில் வாழுகின்ற மக்கள் பயணம் செய்வதற்குஎன தற்பொழுது இரண்டு பஸ் வண்டிகள் சுழற்சி முறையில் சேவையில் ஈடுபட்டுத்தப்படுகின்றன.

காலை ஒரு சேவையையும் மாலையில் ஒரு சேவையையுமே இந்த பஸ் வண்டிகள் மேற்கொள்கின்றன. இன்று ஒரு பஸ்வண்டி சேவையில் ஈடுபட்டால் நாளை அந்த பஸ் வண்டி சேவையில் ஈடுபடாது. மறுநாள் மற்றைய பஸ்வண்டியே சேவையில் ஈடுபடும்.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் காலையில் இப்பாதையில் வருகின்ற பஸ் வண்டியில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்கிறார்கள்.

கல்வி கற்பவர்கள், வேலை செய்பவர்கள் பல்வேறு தேவைகளுக்காக யாழ் வருபவர்கள் இப்பஸ்ஸில் பயணம் செய்கின்றனர். இடையில் எந்த ஒரு பஸ் சேவையும் இல்லை. மாலையில் இவர்

**உதரன்**

களை ஏற்றிக்கொண்டு மீண்டும் இந்தபஸ் வண்டி கனகன் புளியடி ஊடாக கொடிகாமம் செல்லும்.

ஒரு சேவையை இப் பஸ் வண்டி மேற்கொண்டாலும் வருமானத்திற்கு குறைவில்லை. நிறைய வருமானம் கிடைக்கிறது. அத்துடன் மக்களின் ஆதரவும் நிறைய உண்டு,

794 ஆம் இலக்க பஸ்வண்டி யாழ்ப்பாணத்தில் இருந்து தற்பொழுது எப்படி செல்கிறது என்பதை மேலே உள்ள வரை படத்தில் புள்ளிக்கோடுகாளக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் பஸ்வண்டி கச்சேரியை வந்தடைந்து முத்திரைச்சந்தை செம்மணிச்சந்தி நாவற்குழி கைதடி நுணாவில் வரைவந்து நுணாவில் சந்தியால் திரும்பி மட்டுவில் கனகன்புளியடி மந்துவில் ஊடாக மீசாலையை வந்தடைந்து, கொடிகாமம் செல்கிறது.

இந்த பஸவண்டியை தவறவிடும் மட்டுவில், சரசாலை கனகன்புளியடி மந்துவில் மக்கள் 769 ஆம் இலக்க கொடிகாமம் பஸ்வண்டியில் பயணம் செய்து நுணாவில் சந்தியில் இறங்கி நடந்துசெல்ல வேண்டும் அல்லது சாவகச்சேரியில் இறங்கி கால் நடையாகச்

### ஸ்பெஷல் றிப்போட்

செல்லவேண்டும்.

சாவகச்சேரியில் இறங்கினால் புத்தூர் செல்லும் வானில் ஏறி கனகன்புளியடிச் சந்தியில் இறங்கி தமது இருப்பிடங்களுக்கு நடந்து செல்ல வேண்டும்.

இந்த மக்கள் அனுபவிக்கும் பிரயாணக் கஷடங்களைப் பாருங்கள்...ஒரு பஸசேவை... இந்த பஸ சேவையையும் ... ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு நடை பெறுவதில்லை. ஒரு நாளைக்கு காலை கொடிகாமத்தில் இருந்து புறப்ப




### எனக்கு பென்சன் எப்போது?

டும்... மறுநாள் வேறு நேரத்திற்குப் புறப்படும்.

யாழ்ப்பாணத்தில் இருந்தும் ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் புறப்படுவதில்லை. பஸநிலைய நேரக் காப்பாளரிடம் போய்க்கேட்டால் . இன்னும் சரியான நேர அட்டவணை போடாததால்... எந்த நேரத்திற்குப் பஸ வரும் போகும் என்று சொல்ல முடியாது.. என்ற கருத்தைத் தெரிவிக்கின்றனர்,

யாழ்ப்பாணத்தில் இருந்து கனகன்புளியடி ஊடாக செல்லும் பஸ் வண்டியில் நாமும் பயணம் செய்து பிரயாணிகள் படுகின்ற சிரமங்களைப்பார்த்தோம். மாலையில் புறப்படுகின்ற இப் பஸ் வண்டியில் கூடுதலாக இளம் பெண்களே பயணம் செய்கின்றனர். வேலை நிமித்தம் தினம் யாழ் வருகின்ற இவர்கள் மாலை நேரங்களில் வேலை முடிந்து இந்தபஸவண்டிக்காகக் காத்திநிற்கின்றனர்.

இப் பஸ் சேவை அலுவலகங்கள் மூடுகின்ற நேரத்திற்கே மேற்கொள்ளப்படவேண்டும். ஏனெனில் அலுவலகங்களில்

— 7 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். குடாநாட்டு மின்சாரம் மின்னழுத்தம் குறைந்துவருகிறது

யாழ் குடாநாட்டில் வேகமாக அதிகரித்துவரும் மின்சாரப்பாவனையினால் மின்னழுத்தம் குறைந்துவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இரவு நேரங்களில் பல இடங்களுக்கு அழுத்தம் குறைந்த மின்சாரமே கிடைக்கின்றது: மின்சார சபைக்கு கிராமசபைகளும், நகரசபைகளும் நிலுவைப்பணம் செலுத்த வேண்டியுள்ளதனால் மின்சார அபிவிருத்தி வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதன் காரணத்தினாலே புதிய மின் மாற்றிகள் அமைப்பது போன்ற அபிவிருத்தி வேலைகள் செய்யப்படாதுள்ளன. நிலுவைப் பணம் கட்டப்பட்ட பின்னரே மேற்படி வேலைகள் மேற்கொள்ளப்படுமென மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் உள்ள சகல நகர, கிராமசபைகளும் மின்சாரசபைக்கு நிலுவைப் பணம் கட்டவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (03)

# குருநகர் வீடமைப்புத் திட்டம் விரைவில் புனரமைக்கப்படும்

குருநகர் தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தின் நீர் விநியோகமும் மின் விநியோகமும் சீரமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ் மாநகரசபையின் குழுவொன்று இவ் வீடமைப்புத் திட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு நிலைமையை நேரடியாக அவதானித்தது.

இங்கு 160 குடும்பங்கள் வாழ்வதற்கு வீடுகள் அமைக்கப்பட்டபோதும் 200 குடும்பங்கள் தற்போது தங்கி வருகின்றன.

தேசிய வீடமைப்பு அதிகார சபை யாழ் மாநகரசபையுடன் இணைந்து இங்கு பல அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. (03)

# சனசமூக நிலையங்களின் சமாச கல்வி, கலை, கலாசார போட்டிகள்

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் கல்வி, கலை கலாசார குழு இவ்வாண்டும் பல போட்டிகளை நடாத்தவுள்ளது.

கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓவியம். நாடகம் என்ற பிரிவில் மேற்படி போட்டிகள் யாழ் மாநகர சபை சனசமூக நிலையங்களில் இடம் பெறவுள்ளது.

நாடகப் போட்டி மட்டும் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படவுள்ளது. நாடகங்கள் இசைநாடகங்களாகவும், மரபுவழிநாடகங்களாகவும் அமையும். தெரிவு செய்யப் படுபவைக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும். நாடகங்கள் யாழ் மாநகர சபை எல்லைக்குள் உள்ள திறந்த வெளி அரங்குகளில் மேடையேற்றப்படும்.

கட்டுரைப் போட்டியில் நான்கு விடயங்கள் கொடுக்கப்பட்டு 60 நிமிடங்களில் கட்டுரை எழுதப்படவேண்டும்.

கவிதைப் போட்டியில் கவிதைகள்யாவும் மரபுக்கவிதையாகவோ புதுக்கவிதையாகவோ இருத்தல் வேண்டும். கவிதைகள் மூன்று பிரதியில் அனுப்பப்படவேண்டும்.

சிறுகதைப் போட்டியில் சகல சிறுகவிதைகளும் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஒருவர் எத்தனை கதையும் அனுப்பலாம். கதையின் மூலப்பிரதியே அனுப்ப வேண்டும்.

ஓவியப் போட்டியில் ஓவியங்கள் பொது விதியில் கூறப்பட்ட விலாசத்தில் நேரே ஒப்படைக்கலாம். ஓவியங்கள் சிதைவு ஏற்படாமல் ஒப்டைக்கவேண்டும்.

இப்போட்டிகளில் ஆண் பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். பங்கு கொள்வோர் சனசமூக நிலையத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும் போட்டிகளின் முடிவுத் திகதி 30-ம் திகதியாகும்.

மேலதிகவிபரம் தேவைப்படுவோர் சிவன் பண்ணை வீதியில் அமைந்திருக்கும் சமாச அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கல்வி, கலை, கலாசாரத் தலைவர் கவிஞர் தேவதாசனும் செயலாளர் இ. ரவீந்திராவும் கேட்டுள்ளார்கள். (03)

## பாப்பரசர் வெளிநாடு விஜயம்

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மெக்ஸிக்கோவுக்கும் கரீபியன் தீவான குரொக்கோவுக்கும் 9நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.


# 3-வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வி
கோ. ஹம்ஸத்வனி

சுன்னாகம் கந்தரோடை கோபால சர்மா பவானி தம்பதியின் சிரேஷ்ட புத்திரி செல்வி ஹம்ஸத்வனி இன்று தனது 3-வது பிறந்த நாளை வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார். ஹம்ஸா கல்வி, கேள்விகளில் சிறப்புற்று ஊரும் உலகும் புகழ பல்லாண்டு வாழ்க என்று அன்புத்தம்பி ரகுவும், பெற்றோரும், உற்றோரும், உறவினரும், நண்பரும் வாழ்த்துகின்றனர்.



05079


# இன்றுடன் பூர்த்தி

கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன் முத்தமிழ் மாமணி கந்தர் மடம் பிரம்மசிறி சிவ.வைநித்தியானந்த சர்மாவினால் தினமும் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வந்த சம்பூர்ண ராமாயண தொடர் விரிவுரை சிறிராம பட்டாபிஷேகத்துடன் இன்று பூர்த்தியாகின்றது.

மேற்படி விரிவுரையை தினமும் திரளாக மக்கள் வந்து கேட்டு பயனடைந்தார்கள் என்பது குறுப்பிடத்தக்கது.

# இன்றைய நிகழ்ச்சிகள்

## இளவாலையில்

'மைலோ' வெற்றிக்கிண்ணத்திற்கான அகில இலங்கை ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

யாழ் மாவட்ட ரீதியில் இன்றைய தினம் இடம் பெறும் போட்டியில் இளவாலை சென் கென்றிஸ் கல்லூரியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் மோதவுள்ளது.

இப்போட்டி இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய ஏழூர் விளையாட்டரங்கில் மாலை நான்கு மணிக்கு இடம்பெறவுள்ளது. (25)

## நவாலியில்

நாவலியில் அந்திரான் முருகமூர்த்தி கோவில் இலட்சார்ச்சனை பெருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை 4.30 மணிக்கு அபிஷேகப் பூஜையும், 6.30 மணிக்கு அர்ச்சனையும், இரவு 8 மணிக்கு பூத்தண்டிகையில் சண்முகப் பெருமானின் திருவீதி உலாவும் இடம் பெறும்.

## வேம்படியில்

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாஜ விசேட இடைக்காலப் பொதுக்கூட்டம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். சடாட்சர சண்முகதாஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுவார்.

யாழ். மாநகரசபை விசேட ஆணையாளர் பொ. பாலசிங்கம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். திவகலாலா உள்ளூராட்சி ஆணையாளர் தலைமைப் பீடம் ப. பரஞ்சோதி, உள்ளூராட்சித் திணைக்களக் கணக்காளர் க. ஆ. இரகுநாதன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். (12)

# பருத்தித்துறையில் 'போரூட்' கிராமிய வங்கி

'போரூட்' ஸ்தாபனத்தின் கிராமிய வங்கிக் கிளை நிறுவனம் ஒன்று பருத்தித்துறை இன்பருட்டிக் கிராமத்தில் மிகவும் கோலாகலமாக சென்ற சனிக்கிழமை யாழ். மாவட்ட கிழக்குப் பிராந்திய போரூட் ஸ்தாபன இணைப்பதிகாரி சுப்பிரமணியம் ஆனந்தராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட போரூட் ஸ்தாபனத்தின் உயர் அதிகாரிகள், ஊழியர்கள், அங்கத்தவர்கள் மற்றும் அக்கிராம மக்களும் கலந்து இவ்விழாவினைச் சிறப்பித்தனர்.

# பாராளுமன்றநிகழ்ச்சிகளை ரத்துச்செய்யக் கோரிக்கை

பாராளுமன்றத்தின் பௌத்த சாசன நிதியசட்டமூலவிவாதத்தின்போது பகல் போசன இடைவேளையின் போது இடம்பெற்ற நிகழ்ச்சிகளை ரத்துச் செய்க்கோரும் தீர்மானமொன்று 15 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த மார்ச் 13 ஆம்திகதி சட்டமூல விவாதக் குழுநிலை அமர்வின் போது எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்ததிருத்தப் பிரேரணை சபையின் நிரந்தர விதிகளுக்கு முரண்பட்ட விதத்தில் நிறைவேற்றப்பட்டதென சபை முதல்வர் ஒழுங்குப்பிரச்சனை ஒன்றை எழுப்பி இருந்தார்.

இதற்குத் தீர்ப்பளித்த சபாநாயகர் பாராளுமன்றத்தின் நிகழ்வொன்றை ரத்துச் செய்யும் அதிகாரம் தமக்கு இல்லையெனத் தீர்ப்பளித்து, பாராளுமன்றமே அது பற்றி தீர்மானிக்க வேண்டும்எனவும் தெரிவித்துள்ளார்.

இத்தீர்ப்புக்கு அமையவே மேற்படி பிரேரணை சமர்ப்பிக்கப்படுகின்றது.

# நடராசாவின் சேவை வளரட்டும்

பாராளுமன்ற சிரேஷ்ட அறிக்கையாளராகக் கால் நூற்றாண்டு காலம் பெரும் பணிபுரிந்த கோண்டாவிலூர் திரு செல்லப்பா நடராசாவின் பத்திரிகைத்துறை சார்ந்த எழுத்துலகச் சேவை மிகவும் கனதியானது.

எனது நோக்கில் இலங்கைப் பாராளுமன்றம்'' என்ற தலைப்பைக் கொண்ட அவரது நூல் அவரின் பாராளுமன்ற அனுபவத்தின் பிழிசாறு என்று குறிப்பிடலாம். நேற்று புதன் சஷ்டியப்தபூர்த்தி விழாக்கண்ட திரு செல்லப்பா நடராசா அவர்களது சைவத் தமிழ்ச் சேவை மேலும் வளர்ச்சியடைவதாக,

அறுபது வயசு பூர்த்தியடையும் முன்னைநாள்பாராளுமன்ற சிரேஷட அறிக்கையாளர், திரு. செல்லப்பா நடராசா ஜே. பி அவர்கள்து சேவையைப் பாராட்டிப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சேவையின் காரியதரிசி ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் முரசொலிக்கு அளித்த வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆசிரியமணி அவர்கள் தமது செய்தியில், கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபை உறுப்பினரான திரு. செல்லப்பா நடராசாவை அகில இலங்கைச் சமாதான நீதவானாக அரசு நியமித்ததின் மூலம் சமூகத்துக்கு நல்ல பொதுப் பணி புரியக் கூடிய அரிய சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டுள்ளமை பெருமகிழ்ச்சிக்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# சண்டிலிப்பாய் இளைஞர்கள் முன்மாதிரி

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி சந்தியிலிருந்து தொட்டிலடிக்குச் செல்லும் பிரதான வீதியில் இப்பகுதி இளைஞர்களின் முயற்சியால் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதே போன்று சீரணி சந்தியிலிருந்து காரைநகர் செல்லும் வீதியிலும் மின் குமிழ்களை பொருத்தும் முயற்சியில் இளைஞர்கள் ஈடுபட்டுள்ளார்கள். (30)

# வெங்காயவிலை உயருகிறது

யாழ்ப்பாணத்தில் தற்போது வெங்காயத்தின் விலை40ரூபாவாக உயர்ந்துள்ளது.

காலநிலை சீரின்மை காரணமாக வெங்காயச்செய்கை பாதிப்படைந்ததே இந்த விலைஉயர்வுக்கு காரணமாகும் கொழும்பில் கிலோ45 ரூபாமுதல் 50ரூபா வரை வெங்காயம்விற்பனையாகிறது


# கொம்பியூட்டர் கல்வி

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

4 - Months

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்- 20. 05. 1990

Fees: மாதம் 300/-மட்டுமே

- Lectures by Members of the Institute of Data Processing Management (London)
- Practicals on I. B. M Compatibles
- More Hours of Practical
- தமிழிலும் விளக்கங்கள்
- Valuable Certificate on Completion of Course

d BASE III + Lotus 1, 2, 3 Word-Processing C. I. M A, I. A. B, Shorthand & Typing நடைபெறுகின்றன.

For Further details

**School of Business Administration**

(Leaders in Computer Education)

16, 3rd Cross Street

(O. L. R.தேவாலய மேற்குப்பக்கம்)

யாழ்ப்பாணம்

05083

# காடு வெட்டுவது காம்ப் அடிப்பது கிணறு தோண்டுவது பாரம் சுமப்பது

## சுதந்திரப் பறவைகள் பெண் போராளிகளுடன் ஓர் சந்திப்பு

- தர்ஷினி



இவர்களைப் பார்க்கும் விழிகளில் வியப்பு...இவர்களைப் பார்க்க வேண்டும் எனப் பலருக்குத் தவிப்பு ..

பெண் போராளிகள்... புலிப் பெட்டையள் ... சுதந்திரப் பறவைகள்... இப்படி பல பெயர்களாலும்...அழைக்கப்பட்டவர்கள் ...

இதுவரை காலமும் எமக்காக, எம் மண்ணின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து காட்டு வாழ்க்கை வாழ்ந்தவர்கள்...

இன்று...எங்கள் கண்முன்னே எங்கள் மண்மீது.. ... புலிவரியாக கோடிட்ட சட்டையும்...துப்பாக்கியுமாய்... இவர்கள்...; இன்று

எம் விடுதலைப் பாதையின் புதிய மைல் கற்கள்......

கனவுகள் சுமந்த கண்களுடன்—உற்சாகமும்...உறுதியுமாய் ... எதிர்பார்ப்புகளும், துடிப்புகளுமாய் ... சுதந்திரப் பறவைகளாய் இன்று சிறகடிக்கும் இவர்களைச் சந்தித்த போது......

''காட்டு வாழ்க்கை.. அது கஷ்டமில்லை; கசக்கவில்லை... அங்கு ஏற்பட்ட கஷ்டங்க்ளும், நஷ்டங்களும் எம்மை க்லக்க் மடையச் செய்யவில்லை ''

''இழப்புக்களையும் இறப்புக்களையும் சந்தித்து இடிந்து போகவில்லை ... சோதனைகள் கண்டு சோர்ந்து போகவில்லை ..''

''எவையும் . எம் உறுதியை உடைக்கவில்லை...'' ''கையில் வைத்திருந்த இரும்பாயுதத்தைவிட எங்கள் தலைவர் எங்கள் மனதில் ஊட்டிய உறுதி என்ற ஆயுதம் தான் எங்கள் இலட்சியப் பாதைக்கு இறுதிவரை துணை நின்றது;''

''நாங்கள் எங்கள் போரபட்டத்தில் இருந்து பின்னடைந்ததாக சரித்திரமில்லை . சந்தேகம் என்றால் கேட்டுப் பாருங்கள் அந்தக் காட்டு மரங்களை .....''

இல்லை; எமக்கு சந்தேகமில்லை.

ஆண் போராளிகளுக்கு நிகராக...சில சமயம் அதற்கு மேலாக ... அற்புதமாக ... அநாசியமாக .. இந்தப் பெண் போராளிகள் போராடி...வெற்றி பெற்ற வீர சரித்திரங்கள் ஒன்றில்லை.. இரண்டில்லை எழுதுவதற்கு.

தமக்குரிய திறமைகளுடன்; போர் முறைகளுடன்- இவர்கள் போராடி சரித்திரம் படைத்த நிகழ்வுகள் எத்தனை .. தமக்குரிய 'குழுவு'டன் ... அல்லது சில சமயம் தன்னந் தனியாகத்தானும் களத்தில் குதித்து-எதிரிகளை ஓட ஓட விரட்டிய வீரச் சம்பவங்கள்தான் எத்தனை...

''காட்டு வாழ்க்கை ஒரு சந்தோசமான வாழ்க்கை... வரும்போது கஷ்டங்களும், து ஈபங்களும் சேர்ந்தேவரும் ஆனால் . அவற்றை எல்லாம் நாங்கள் எதிர்பார்த்தே இங்கு வந்தோம்...''

''இவை எல்லாம் வரும் என எதிர்பார்த்திருந்த எமக்கு எம் முன் எதிர் வந்ததெல்லாம் . தூசு''

''போராட்டம் என்ன பட்டு மெத்தையிலா வரும் ? சுதந்திரம்தான்' எங்கள் சுகம்... விடுதலைதான் எங்கள் வசதிகள்... பாதிப்புக்கள் எங்கள் போராட்டத்தின் பசளைகள்...''

இளவயதின் ஆரம்பத்தில் நிற்கும் இவர்கள்தான் எத்தனை துடிப்பானவர்கள்...!

எத்தனை உற்சாகம் இவர்களிடம்...

வீரமும், உறுதியும் இவர்களுடன் ஒன்றாய் விளைந்தல்லவா நிற்கின்றது !

நம்பிக்கையும், உற்சாகமும் இவர்களுக்கென்ன சொந்தக் காரர்களா? இப்படி எப்பவும் ஒட்டி நிற்பதற்கு?

ஆயுதங்கள் இவர்களுக்கென்ன அலங்காரப் பொருள்களா...எப்பவும் இவர்களுடன் இருப்பதற்கு?

''பாரம் தூககுவது . பொதிகளை முதுகில் சுமப்பது காடுகளை வெட்டுவது ...'காம்ப்' அடிப்பது . கிணறு வெட்டுவது .....''

உடற்பயிற்சி ..போர்ப்பயிற்சி...ஆயுதப்பயிற்சி... ''

''இவை என்றும் எமக்கு அயர்ச்சி தந்ததில்லை .. ''

''ஆரம்பத்தில் சிறு கஷ்டம்தான் ... அடுத்த்வேளை . அதுவே 'த்ரிலிங்'......''

வண்ண வண்ண உடையணிந்து...வண்ணாத்திப் பூசிச்களாய் வாழ்வின் வசந்தங்களை அனுபவிக்கும் வயதில் ..

கற்களும், முட்களும் கால்களைக் கிழிக்க; வெயிலும், மழையும் இவர்களை வாட்ட; அடிக்கடி பயங்கர மிருகங்கள் சூழ்ந்து பயங்காட்ட;...சில சமயம் பசியும் சேர்ந்து பயமுறுத்த . ; களத்தில் குதித்த இந்தக் கன்னிப் பெண்களுக்கு ...

விடுதலை உணர்வே வண்ண உடை, தமிழ் இன விடிவே தங்க நகை, காட்டு வாழ்வே இவர்களின் கனவுத் தொழிற்சாலை..

தங்கள் குருத்து நாட்களை அந்த இருட்டுக் காட்டிற்குள் உதிர்த்துக் கொண்டிருந்த இவர்கள் இன்று எங்கள் வீதிகளில்...உலாவரும் கம்பீரக் காவலர்கள்; நம்பிக்கை வடிவங்கள்!

''...எங்கள் காட்டு வாழ்க்கை—அது வரண்ட வாழ்க்கை அல்ல.. அங்கு நாங்கள் கழித்த நாட்கள் ... ஆகா ... அவை வசந்த ஜெனிப்புக்களும்—சந்தோச முகில்வுகளுமாய்...அந்த நாட்கள் .. அவை எமக்குப் பௌர்ணமி நாட்கள் . ''

''எங்கள் கனவுகளுக்கு உருவம் கொடுத்த களம் அந்தக் காடுகள் . ''

''எங்கள் இலட்சியக் குருவிகள் குஞ்சு பொரித்தாலும் அந்தக் சுாட்டில்தான் ''

''அங்கிருந்தவை வெறும் காட்டு மரங்கள் அல்ல – எங்கள் வெற்றிகள் தினமும் புதுச்ர்ட்டைகளை மாற்ற எம்மைச் சுற்றி கை கோர்த்து; காவல் நின்ற அரண்கள்......''

அந்தக்காடு கையில் ஆயுதம் ஏந்தி களம் குதிக்க மட்டும் எமக்கு கற்றுத் தரவில்லை...எங்கள் கவலைகள் வளரவும் அவை வித்திட்டன ...''

''அங்கு களப்பயிற்சி மட்டுமல்ல, கலைப்யிற்சியும் உயிர் பெற்றது..... ''

''காட்டில் எங்கள் கவிதைகள் மலர்ந்து மணம் பரப்பின .. எங்கள் நாடகமும், நாட்டியமும் கை கோர்த்து காடெல்லாம் திரிந்தன ''

''காட்டின் எல்லைவரை எங்கள் இசையும், கீதமும் எதிரொலித்தது ..அங்குதான் ..... நட்புக்களின் அறிமுகம் இதயங்களை இணைத்து, இறுக்கியது; அங்கு தான் . ...''

''இறப்புக்களும், இழப்புக்களும் இணைந்தொன்றாய் எம்மைக் கொன்றன இரத்தமும்-சதையுமாய்இருந்தவர்களை அங்கு தான் சிதை நெருப்பில் போட்டெரித்தோம் .....''

''குண்டு வெடிப்பு ஓலங்களும், துப்பாக்கிச் சத்தங்களும் .. சங்கமிக்கும் அந்தப் போர்க்களத்தில்...' நீர்ச் சுனைகளும்- பறவைகள் பாடும் கீதங்களும், பூக்கும் மலர்களின் நறுமணங்களும் பனிப்புகார் நடுவே பாயும் தேனருவியும் அந்த மெல்லிய தென்றலும்...இவை...எல்லாம் . அந்த முரட்டுக் காட்டுப் பாதையில் பூ மெத்தைப் படிகள்..... ''

*சினிமாப் பார்க்கும் விழிகள் . காட்டுக்குள் எதிரிகளின் வரவை எதிர்பார்த்து நின்றன. அழகுப் பூச்சுக்கள் அப்பியிருக்க வேண்டிய முகத்தில்...அடுத்த 'அற்றக்' ஆமியுடனான அல்லது...என்ற சிந்தனைகளின் அச்சுக்கள்! பூவிலும் மெல்லிய பூங்கொடிகள் எனக் கவிஞர்கள் கத்திக்கொண்டிருக்க காட்டுக்குள்காவல்அரண்களைஅமைக்ககல்லுடைத்துக் கொண்டிருக்கும் அந்த மென் கைகள் இல்லா விட்டால் காட்டுப்பாதை வெட்ட கையில் கத்தி தூக்கிக் கொண்டிருக்கும் அந்தக் கரங்கள் ....*

''நாங்கள் எப்பவும் தயார் நிலையிலேயே இருப்போம்- தூக்கும்போது கூட எங்கள் கரங்கள் துவக்குகளிலே இருக்கும் எமது பயிற்சிக்காலம் எப்பவும் எமக்கு 'த்ரிலிங்'தான் ஒழுக்கம், கட்டுப்பாடு, கடமையுணர்வு இவற்றோடு புரிந்துணர்வும் எமக்குப் போதிக்கப்படுகின்றது..... ''

*அரிசிவிலை என்ன எனக் கணக்குப் பார்க்கும் மனங்களில் அரசியல் நிலைகள் எல்லாம் தெளிவாகத் தெரிகின்றன. அகப்பை தூக்கிய கைகள் ஆயுதங்களுடன் அணிவகுத்து நிற்கின்றன. நாங்கள் துடைப்பங்கட்டைகள் அல்ல ..எடுத்துக்காட்டுக்கள் என்று காட்டுக்குள் சென்று களம் அமைத்தவர்கள் இவர்கள் . !*

''எங்கள் கைகளில்தான் கனக்கும் ஆயுதங்கள் எங்கள் மனங்களில் எப்பவும் மெல்லிய உணர்வுகள் நாங்கள் சாவிற்குட் பயந்தவர்கள் அல்ல இந்த சா எமச்கு எப்பவும் செல்லாக் காசு! ஆனால் எம்முடன் ஒன்றாய் இருந்தவர்கள், இறப்பின்போது இல்லாமல் போகும் போதுதான் நாங்கள் இடிந்து போவோம்! மரணங்கள் சில நேரம் எம்மை உடைத்துவிடும் .. இறந்த உடல்களை தோளில் சுமந்து நீண்டபயதை நடந்து போவோம் புதைக்கும்வரை பிணங்கள் அருகே காவல் நிற்போம். புதைத்தபின் மண் போட்டு மறைத்த பின் இழப்பின் சாட்டைகள் இதயங்களில் வரி வரியாக அறையும் ..வேதனைகளில் சிலகாலம் அழுந்திக் கிடப்போம் . சில காலம் தான்... மீண்டும் எங்கள் கடமைகளில் எம்மை மறப்போம் ..சோகங்கள் மெல்ல சொல்லிக் கொண்டு போகும் ..மீண்டும் மீண்டும் எங்கள் இலட்சியப் பாதையில் இழப்புகள் அடிக்கடி வந்து வழி மறிக்கும் ..ஆனால் நாங்கள் விலகி ஓடுவதில்லை;எழுந்து நிற்போம்...!''



## முரசொலிக்கு வந்த கடிதம்

# நெடுந்தீவு வைத்தியசாலையின் அவலநிலை போக்கப்படுமா?

ஆசிரியர்,
முரசொலி,

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையின் இருபுறங்களும் சுற்றுமதிலோ, வேலியோ இல்லாமையால் கட்டாக் காலி மாடுகள், ஆடுகள் ஆகியவற்றின் தொல்லைகள் அதிகரித்துள்ளதுடன் அவற்றின் அட்டகாசத்தால் நன்னீர் தொட்டியின் பைப்பும் உடைந்த நிலையில் உள்ளது. மேலும் மூன்று வாட்டுகளிலும் உள்ள மலகூடங்களின் குழிகள் அடைபட்டமையால் பாவிக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் நோயாளர் பெரும் அவதியுறுகின்றனர். இங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு தனியான மலகூடமும் இல்லை என்பதை சுட்டிக்காட்டுவதோடு இவ் வைத்தியசாலையில் காயங்களுக்கு இளை போடும் நூல் ''சிறிஞ்'' போன்ற அவசிய தேவைக்கான உபகரணங்கள் கூட இல்லை.

நெடுந்தீவிலிருந்து 33 மைல்களுக்கப்பால் கடல் மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும், சென்றே யாழ் போதனா வைத்தியசாலையை அடைய முடியும. இவ்வாறான குறைகள் நிலவுவதை இக்காலகட்டத்தில் பொது மக்களாகிய நாம் பார்த்திருக்க முடியுமா? அத்துடன் நீண்டகாலமாக திரிபோச மாவும் இங்கு வழங்கப்படவில்லை என்றும், இதனை இங்கு கொண்டு வருவதற்கு ஒப்பந்தக்காரர் நியமிக்கப்படவில்லை என்றும் அறியக் கூடியதாகவுள்ளது.

எனவே இப்பின்தங்கிய தீவகத்தின் நன்மைகருதி சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

நெடுந்தீவு

சு. கோபாலபிள்ளை
(கணக்காளர், பல நோ.கூ.சங்கம், நெடுந்தீவு)

# இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமல்போகும்-முத்திரைகள்

ஆசிரியர்
முரசொலி

தபால் கந்தோர்களில் இல்லாத முத்திரைகள் எப்படி தனியார் கடைகளுக்கு வருகின்றன?

நேற்று முன்தினம் யாழ்நகரப்பகுதிகளில் உள்ள ஒருதபால் நிலையத்திற்குச் சென்று பத்துரூபா முத்திரை கேட்டேன். ''முத்திரை முடிந்து விட்டது'' என்றனர். ஆனால், பக்கத்தில் உள்ள தனியார் கடையில் பத்துரூபா முத்திரைக்கு பதினொரு ரூபா கொடுத்து வேண்டிக் கொண்டேன்.

தபாற் கந்தோருக்கு என்றே முத்திரைகள் அனுப்பப்படுகின்றன. ஆனால் அவை இங்கு இருப்பதில்லை. தனியார் கடைகளில் எவ்வளவு பெறுமதியான முத்திரைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

முன்னைய காலங்களில்தான் கொழும்பிலிருந்து முத்திரை அனுப்பவில்லை. தற்போதைய சுமுகமான நிலையிலும் அப்படியா? இல்லை, தபால் திணைக்களத்தின் அசமந்தப் போக்கா? இன்று மக்களின் அத்தியாவசிய சாதனங்களில் ஒன்றாக தபால் தொடர்பு காணப்படுகிறது. அத்தொடர்புக்கு தேவையான முதித்ரைகள் இனியாவது தாராளமாக நகரப்பகுதித் தபாற்ந்கதோரில் கிடைக்க வழி பிறக்காதா?

திருநெல்வேலி

கே, ஆர் சிவா

# மெய்ப்பாதுகாவலர்கள் சம்பளமின்றி பெரும் சங்கடம்

## உறுப்பினர் புகார்

வடக்கு கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களினதும், அவர்களது மெய்ப் பாதுகாவலர்களினதும் இரண்டு மாத சம்பளத்தை வழங்குமாறு மாகாணசபை அமைச்சரிடம் அந்த மாகாணசபை உறுப்பினர்கள் கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பான கடிதம் ஒன்றினை மேற்படி ஊழியர்கள் சார்பில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அமைச்சருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தம் வடக்கு கிழக்குமாகாணசபை ஈழ ஜனநாயககுடியரசின்தேசியஅரசுப் பேரவையாக கடந்த மார்ச் மாதம் 1ஆம் திகதி பிரகடனப் படுத்தப் பட்டதை எதிர்த்து அன்றைய கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்த முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இன்னமும் மாகாண சபை உறுப்பினர்களாகவே இருக்கின்றனர்.

ஆயினும் மாகாணசபை உறுப்பினர்களாகிய எமக்கும் எமது மெய்ப்பாது காவலர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய இரண்டு மாத சம்பளமும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக மாகாண சபையின் செயலாளருக்கும் மாகாணப்பிரதி பொலிஸ்மா அதிபருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டும் பலன் எதுவும் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகளால்எமது உறுப்பினர் கைது செய்யப்படுவதால் நாம் எமது பகுதிக்கு செல்ல முடியாத சூழ்நிலையை மாற்றவும், எமது பாக்கிச் சம்பளம்ப் பணத்தை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனஅக் கடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது

## மீண்டும் அதிகரிப்பு

அங்கர் பால்மா மீண்டும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது கடந்த வாரம் 46 ரூபாவிலிருந்து 44. 60 சதமாக குறைக்கப்பட்ட அங்கர் பால்மாவின் விலை மீண்டும் 46ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# பளையில் சிற்றூரவை

(பளை)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் சிற்றூர் அவை அமைக்கும் பணிகள் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு குழுவிலும் ஏழுபேர் கொண்ட நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்படுவதாக பளை அரசியல் பொறுப்பாளர் செல்வராசா தெரிவித்தார். (ப 3)

# ஐயனார் தேவஸ்தான பரிபாலனசபை

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் வேவிற்பதி சிறீ ஹரி ஹரபுத்திர ஐயனார் தேவஸ்தான பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் முத்தமிழ்குருமணி சிவசிறீ.ந.சர்வேஸ்வரக் குருக்கள். காரியதரிசி. திரு.சி. நவரத்தினம் பொருளாளர் திரு. க. பாலசுப்பிரமணியம். நிர்வாக சபை உறுப்பினர்களாக 12பேர் தெரிவாயினர். (30

# நாவற்குழியில் சித்திரைபூரணவிழா

நாவற்குழி அறிவொளி மன்றம்சித்திரை பூரண விழா நாவற்குழி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நேற்றய நிகழ்ச்சியாக காலையில் உறுப்பெழுத்து இசைபோட்டி தமிழ்ப்பேச்சுபோட்டி என்பனஇடம்பெற்றன.

பிற்பகல் பொதுஅறிவுப் போட்டி திருக்குறள் மனனப் போட்டி ஆங்கிலப்போட்டிகள் என்பன இடம்பெற்றன.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று வியாழக்கிழமை நடைபெறும் நிகழ்ச்கிகள் பொ.சுப்பையா தலைமையில் நடைபெறும் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பூ. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார் அதனைத் தொடர்ந்து சங்கீத பூஷணம் ச பாலசிங்கத்தின் இசைக்கச்சேரியும் விவாத அரங்கும் நடைபெறும்.

# திறந்த பல்கலைக்கழக கம்பியூட்டர் சான்றிதழ்

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் கடந்த பெப்ரவரி மாதத்துக்கு முன் கம்பியூட்டர் பயிற்சியை பூரணப்படுத்தியவர்கள் யாழ். பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் சான்றிதழ்களைப்பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வரும் பொழுது தங்கள் மாணவர் பதிவுப் புத்தகத்தையும் கொண்டுவரும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ப-7)

# மாணவராக ஆசிரியராக...

மருதானை தொண்டர் தமிழ் வித்தியாலயத்தில் கடந்த ஏழுவருடங்களாக ஆசிரியராக கடமையாற்றிய திரு எஸ்.பி. தவராசா தற்போது மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.

இவர் இக்கல்லூரியின் பழைய மாணவராவார்.

## சாவகச்சேரி சுகாதர பிரிவில்

# திரிபோஷா கையிருப்பில் உண்டு ஆனால் விநியோகம் இல்லை

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நாடத்தப்படும் தாய்சேய் சிகிச்சை நிலையங்களுக்கு திரிபோஷா மா ஒழுங்காக வழங்கப்படுவதில்லையென பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

திரிபோஷா மா சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு வந்துள்ள போதிலும் அவற்றை சிகிச்சை நிலையங்களுக்கு விநியோகிக்க வாகன வசதியில்லை என சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தெரிவிப்பதாகவும் கூறினர். (ப.3)

# யாழ்.சாலை ஊழியருக்கு விரைவில் இடமாற்றம்

(மண்டைதீவு)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் யாழ் சாலையில் இருந்து பல சாரதிகள், நடாத்துநர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்,

காநரநகர், முல்லைத்தீவு வவுனியா ஆகிய சாலைகளுக்கே இம் மாற்றம் நடைபெறவுள்ளது. இது தொடர்பான கடிதங்கள் உரியவர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப் படவுள்ளன. (ப—12

# அரச ஊழியர் சம்பளம் இம்மாதம் 17-ம்திகதிக்கு முன்

அரச உத்தியோகஸ்தர் ஊழியர்க்கான இம் மாதச் சம்பளம் எதிர்வரும் 17 ம் திகதிக்கு முன்னர் வழங்கப் படவுள்ளது.

இதற்கான சுற்று நிருபங்களை அரசு சகல அரச அலுவலகங்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள சகல அரச அலுவலகங்களும் இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளன (03

# யாழ்.செஞ்சிலுவை சங்கத்தில் கைப்பணிப்பொருட் கண்காட்சி

(தாளையடி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினத்தை முன்னிட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவினால் செஞ்சிலுவைச் சங்க யாழ் தலைமை அலுவலகத்தில் வாழைநார் உற்பத்திப் பொருட்கள் பனம், பொருட்கள் உற்பத்தி, மாணவர்களின் சிற்பம், ஓவியம் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் உதவிவுடன் நடாத்தப்பட்ட வாழைநார் உற்பத்திப் பொருட்கள் பயிற்சியின் போது முழங்காவில் யுவதிகளினால் செய்யப்பட்ட வீட்டுப்பாவனைப் பொருட்களும், திருநெல்வேலி, மயிலணி, புன்னாலைக்கட்டுவன் யுவதிகளினால் செய்யப்பட்ட வீட்டுப்பாவனைப் பொருட்களும் கண்காட்சியில் இடம் பெற்றன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணப் பிரிவு பனை அபிவிருத்தி சபையுடன் இணைந்து யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளில் நாடத்திய பனை ஓலை உற்பத்திப் பொருட்கள் பயிற்சிவகுப்பின் போது யுவதிகளினால் தயாரிக்கப்பட்ட பனை ஓலைப் பொருட்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (18)

## சுவையானசெய்திகள்

# பதின்மூன்று மட்டுமா?

இடாஹோவில் பாயீஸ் நகரத்தைச்சேர்ந்த எவல்யன் ஹில்டிகார்டு என்ற அழகிக்கு'டயமணட் டூத்லீல்' என்ற பட்டப் பெயர் உண்டு.

இந்த வைரப் பல் வில்லி அடிக்கடி சேப் மாற்றுவது போல் கணவர்களை மாற்றுபவள். இவள் இதுவரை 13 தடவை மணந்து 13 கணவர்களையும் விவாகரத்து செய்திருக்கிறாள். 13 பொருத்தமற்ற எண் எனக் கருதப்படுவதனால் இவர் தனது 'மாற்றும்' படலத்தை தொடர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பசிக்கிறது கொண்டுவா மேசை...

இத்தாலியில் பெனவெண்டோ நகரத்தைச் சேர்ந்த கைக்கேல் லோட்டிட்டோ என்பவர் யாரும் செய்ய முடியாத காரியத்தைச் செய்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றார்.

மேசைகளையும், நாற்காலிகளையும் துண்டு துண்டுகளாக நொருக்கி அல்லிபோல் ருசித்துத் தின்கிறார். அவற்றை ஜீரணித்துவிடும் சக்தியும் இவருக்கு இருக்கிறது. இவற்றைப் பலகாலமாக ஒரு நிகழ்ச்சியாகவே மேடைகளில் நிகழ்த்தி வருகின்றார்.

# மீன் பிடிக்கும் எலிகள்

நியூகினியில் மீன் பிடிக்கும் எலிகள் உள்ளன. இந்த எலிகள்மீன்யபிடிக்கத் தூண்டிலுக்குப் பதிலாக வால்களையே பயன்படுத்துகின்றன.

இந்த எலிதன் வாலை ஆற்றினுள் விடுகிறது. மீன் வாலைக்கடித்துக் கவ்விய உணர்வு ஏற்பட்டவுடன் சட்டென வாலைவெளியே இழுத்து மீனைப் பிடித்து விடுகின்றது.

3-ம் பக்கத் தொடர்ச்சி

## 794 இலக்க...

வேலை செய்பவர்களே தினமும் இப் பஸ்பண்டியில் பயணம் செய்கின்றனர். இவர்கள் பலரது கைகளில் சீசன்ட் ரிக்கட் இருப்பதைக் சுாணமுடிகிறது.

இப் பஸ் வண்டியில் பயணம் செய்யும் பெண் ஒருவரிடம் கருத்துக் கேட்டோம் சீசன்ட் ரிக்கட்டை எடுத்தாலும் இந்த பஸ் ஒழுங்கில்லாததால் நாம் மினிபஸ்ஸில் ஏறி சாவகச்சேரியில் இறங்கிகால் நடையாக சுமார் மூன்று மைல்தூரம் இரவு வேளையில் பயணம் செய்கிறோம். நாம் பின்தங்கிய பகுதியில் வாழ்வதால் எம் குறைகளை யாரும் கவனத்திற்கு எடுப்பதில்லை. பத்திரிகைகள் கூட பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்களின் பிரச்சனைகளை எழுதுவதில் அக்கறை காட்டுவதில்லை .. அவைகூட நகர மக்களின் பிரச்சனைகளையே எழுதுகின்றன... கிராமப் புறங்களில் வாழும் மக்கள்... மனிதர்கலில்லையா... அவர்களது அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொடுக்கக்கூடாதா...'' என்று கண்கலங்க எம்மிடம் கூறினார்.

கிராமப்புற மக்களுக்கு பல்வேறு விதமான பிரச்சினைகள் இருக்கின்றது. இது ஒரு சிறுபிரச்சனை... இது போன்ற பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கியவாறே தமது வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள்.

இ. போ. ச. பஸ் சேவை ஒழுங்காக இல்லாததால். கடந்த ஒரு வாரமாக கனகன்புளியடிச் சந்தியில் இருந்து மினிபஸ் ஒன்று சேவையை ஆரம்பித்துள்ளது.

வருமானம் இல்லை என்றால் .. மினிபஸ் புதிய சேவையை ஆரம்பிக்குமா...? சிந்தித்துப் பார்க்க வேண்டிய வினா .. மினிபஸ்-சேவையை நடத்த வேண்டும் என்பதற்காக... வடபிராந்திய போக்குவரத்துச் சபை விட்டுக் கொடுக்கிறதா...? இப்படியொரு சந்தேகம் பிராயாணிகள் மத்தியில் தற்பொழுது எழுந்துள்ளது. வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஒழுங்காக பஸ் சேவையை நடத்த போதிய பஸ்கள் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் ஆனால்... பஸ் சேவை , அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்களை பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்துவதும் தவறில்லை. அல்லவா? .. மினிபஸ் வண்டிக்கு வருமானம் இச் சேவையால் கிடைக்கிறது. என்றால் ... ஏன் .. இ. போ. ச. பஸ் வண்டிக்கு கிடையாது. ?

தற்போது சேவையில் ஈடுபடுகின்ற 794 இலக்க பஸ் வண்டிகளை ஒரு கணம் நோக்குவோம் 23 சிறி 68 96 என்ற இலக்கத்தைக் கொண்ட பஸ் வண்டிக்கு பின்பக்கம் ஜன்னல் இல்லை .. பயணம் செய்ய நல்ல சீட்டுக்கள் இல்லை...பஸ் அடித்தள பலகைகளுக்கூடாக நிலத்தைப் பார்க்கலாம்... காற்றோட்டத்திற்காகத் தான்... இந்த இடைவெளிகளோ... என்றுகூட சந்தேகம் எழவைக்கும். ஜன்னல்கள் எழுப்புகிற அவல ஒலிகள் காதை செவிடாக்கும் இந்த பஸ் வண்டியைத்தான் ''பொறிக் கிடங்கு பஸ் வண்டி என்று முன்னர் செய்தி வெளியிட்டிருந்தோம்... பலருடைய செருப்புக்களை வீதிக்கு இலவசமாக வழங்கிய பெருமை இதற்கே உண்டு.

அடிக்கடி... இந்த பஸ்வண்டிக்கு நோய் வரும் நடுத் தெருவில் பயணிகளைத் தவிக்கவைக்கும் பஸ் வண்டி என்ற பெருமையும் இதற்கு உண்டு.

அடுத்த பஸ் வண்டி 23 சிறி 7357 என்ற இலக்கத்தைக் கொண்டது இராணுவ கொடுமைகளை நினைவுகூரும் இப் பஸ் வண்டி இன்றும் ஒரு சீற்றில் செல்துண்டு ஒன்றை வைத்து வைத்துக்கொண்டே பயணம் செய்கிறது... ஷெல் துண்டை பாதுகாத்து வைக்கும் பஸ் வண்டி என்ற பெருமையும் இதற்கு உண்டு.

மேற்குறிப்பிட்ட பஸ் வண்டியை விட இந்த பஸ் வண்டிக்கு நோய்கள் சற்றுக் குறைவு என்றே சொல்லலாம் எத்தியோப்பியா நாட்டில் ஓடுகின்ற பஸ் வண்டிகள் கூட நல்ல நிலையில் இருக்கும்... நம் பஸ் வண்டிகளோ...மிகவும் பரிதாபகரமான நிலையில் ... இன்று...

இப் பஸ் வண்டிகளைச் செலுத்தும் சாரதிகள் போற்றுதற்குரியவர்கள்... அவர்கள் முற்பிறவியில் செய்த பாவமோ என்னவோ. இந்த பஸ் வண்டியோடு. வேதனை வாழ்க்கை வாழ வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

அடிக்கடி பஸ் பிறேக்டவுனாகும் பஸ்ஸின் நோயைக் கண்டுபிடித்து குணப்படுத்தி பிரயாணிகளை உரிய இடத்தில் சேர்க்கும்வரை அவர்களும் படும் சிரமங்களை வார்த்தைகளால் இலகுவில் வர்ணித்துவிட முடியாது.

பஸ் பிறேக்டவுனானால் .. நடத்துனரின் நிலை தர்ம சங்கடமாகும் பஸ் காசைத் தா நாங்கள் இறங்கப் போகிறோம் என்பார்கள் ..

இப்படியான வேதனைகளுக்கு மத்தியில் அவர்களது பஸ் வாழ்க்கை சென்று கொண்டிருக்கின்றது.

இந்த நிலை இப்படி இருக்க பரிதாபத்திற்குரிய பஸ் வண்யயைக்கூட உரியஇச்சேவையில் இருந்து இடை நிறுத்தி வேறு இடத்திற்குச் சேவையில் ஈடுபட வைத்து தாம் விரும்பிய நேரத்திற்கு இப்பாதையூடாக சேவையில் ஈடுபட வைக்கின்றார்கள்.இந்த நிகழ்வு கடந்த சில நாட்களாக நடைபெறுகிறது.

இந்த பஸ் வண்டி கனகன் புளியடி ஊடாக நுணாவில் சந்தியை அடைந்து அதன் பின்னர் கண்டிவீதி வழியாகவே யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்தது. கடந்த ஒரு வாரகாலமாக இப்பஸ்வண்டி 'யாழ் வரவேற்புச்சந்தி என அழைக்கப்படுகின்ற சந்தியில் இருந்து செம்மணி யூடாக முத்திரைச் சந்தியை அடைந்து அதனூடாக கச்சேரி நல்லூர் வீதி வழியாக கச்சேரியை அடைந்து மீண்டும் கண்டிவீதிவழியாகயாழ்ப்பாணத்தை வந்தடைகிறது.

கடந்த ஒரு வாரகாலமாக முத்திரைச் சந்தியில் பஸ் செல்லும் பாதையை வரைபடத்தில் வட்டமிட்டுக் காட்டியுள்ளோம். இதுபற்றி இந்த பஸ் வண்டியில் பலவருடங்களாக பயணம் செய்யும் பயணி ஒருவரிடம் கருத்துக் கேட்டதற்கு முத்திரைச் சந்தியில் இறங்குவோர் எவரையும் நான் காணவில்லை. இந்த பஸ் முத்திரைச் சந்தியால் போகத் தொடங்கிய ஒருவாரமும் நாள் தவறாமல் இதே பஸ்சில் தான் வருகிறேன் முத்திரைச் சந்தியில் எவராவது இறங்கியதாகத் தெரியவில்லை. இந்த பஸ் இப்பாதையால் பயணம் செய்வது ஏன் தெரியுமா?... என்று ...... 'தமக்கு வேண்டிய ...' என்றுஒருவிஷயம்சொன்னார். ... அவர் சொன்ன இத்தகவலை சரி என ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை,

இன்னொரு பிரயாணி கருத்து வெளியிடுகையில் முத்திரைச் சந்தியில் செல்லவேண்டிய பஸ 769 ஆம் இலக்க கொடிகாம பஸ் வண்டியே... இந்த பஸ இந்தப் பாதையில் போனால் சிலவேளைசிலருக்கு அது பயன்மிக்கதாக இருக்கும்

794 இலக்க பஸ வண்டியில் பயணம் செல்வோரில் பெரும்பாலானோர். அரியாலை பகுதியில் உள்ள தொழிற்சாலைகளிலும், கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள ஸதாபனங்களிலும் வேலை செய்பவர்களாகவே இருக்கின்றனர். என்ற தகவலை அப்பிரயாணி வெளியிட்டார்.

'வட பிராந்திய போக்குவரத்து சபை நேரக்காப்பாளர்கள், சாரதிகள், நடத்துனர்களுக்கு கிராமப்புற மக்களின் பிரச்சனைகள் அப்பகுதிகளுக்கான பஸசேவைகளின் முக்கியத்துவம் தெரியும். உயர் அதிகாரிகளுக்கோகிராம மக்களின் பிரச்சினையோ அல்லது கிராமப் புறங்களைப் பற்றியோ எதுவும் தெரியாது' என இப் பஸசில் பயணம் செய்யும் அரசாங்க அலுவலகர் ஒருவர் பொரிந்து தள்ளினார்.

ஒவ்வொரு பகுதி மக்களின் பிரச்சினையும் நேரடியாகச் சென்று பார்த்துக் கேட்டு அறிகின்ற போதுதான் உண்மை நிலைமைகளை அறிந்து கொள்ள முடியும் இல்லாவிடில் அமெரிக்காவில் இருந்து கொண்டு பூநகரியில் உள்ள ஒருவருக்கு உத்தரவு போடுவது போன்றே இருக்கும்.

மட்டுவில், சரசாலை, கனகன் புளியடி, மந்துவில் வேம்பிராய் பகுதி மக்களுக்கு காலையில் கொடிகாமத்தில் இருந்து 7. 15 க்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து பிற்பகல் 5 மணிக்கும் நேரமாற்றமின்றி பஸ சேவை நடைபெற வேண்டும் என்பதே இவர்களது வேண்டுதலாகும்.

கடந்த காலங்களில் இப்பகுதிக்கு இரண்டு பஸகள் காலை முதல் மாலை வரை தொடர்ச்சியாக சேவைகள் நடந்து வந்தன...... எமக்கு பழையபடி பஸசேவை நடத்துக என்று நாம் கேட்கவில்லை. இப்போது உள்ள இகு சேவையையாவது ஒழுங்காக நடத்தினால் போதும் என்பதே எமது கோரிக்கையாகும். உயர்அதிகாரிகள் பின்தங்கிய பகுதிமக்களின் பிரச்சினைகளை மனிதாபிமானத்துடன் நோக்குவார்களா? ... நோக்குவார்கள் என்றே நம்புவேமாக...? !

# அமெ. தாக்க எத்தனிப்பின் கியூபா மற்றொரு வியட்னாமே

கியூபா ஆயுதப்படைகள் நாடுதழுவிய ரீதியிலான இராணுவ ஒத்திகைகளை மேற்கொண்டு உஷார் நிலையில் இருக்கும். அதேவேளை அமெரிக்கா எங்களை தாக்க முயன்றால் இன்னொரு வியாட்னாமாக அல்லது அதைவிட மோசமானதாக கியூபா இருக்கும்''

மேற்கண்டவாறு கியூபா ஜனாதிபதி பிடல்காஸ்ரோ எச்சரித்துள்ளார்.

கரிபியன் பிரதேசத்திலே அமெரிக்கா மூன்று பாரிய இராணுவ ஒத்திகைகளையும் ஏககாலத்தில் நடத்துகின்றமையால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை சமாளிக்கும் பொருட்டே கடந்த வாரம் முதல் படைகளை நகர்த்தும் நடவடிக்கைகளை கியூபா மேற்கொண்டதாகவும் அவர் சொன்னார்.

தலைநகர் ஹவானாவில் உள்ள இராணுவ நிலை ஒன்றிற்குச் சென்ற ஜனாதிபதி காஸ்ரோ, அமெரிக்கர்கள் ஒத்திகைகளை மேற்கொள்கின்ற இச் சந்தர்ப்பமே நாமும் எமது சொந்த ஒத்திகைகளை மேற்கொள்வதற்கான தருணமாகும். என்று கூறினார்.

அமெரிக்கர்களுக்கு வியட்னாமில்ஏற்பட்ட சதியைப் போல் அல்லது அதைவிட கொடுமையானதாக இங்கு ஏற்படக் கூடியதாகவே எம்மை நாம் தயார் செய்துள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

---

இலங்கை மெய்கண்டார் ஆதீன முதல்வர்

## ஸ்ரீல ஸ்ரீ ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் (தொண்டர்)

### 25.04.90இல் சமாதியானார்கள்

ஈழமணித் திருநாட்டின் சைவமும் தமிழும் சிறப்பிட விளங்கிடும் புண்ணிய பூமியாம் யாழ்ப்பாணத்தின் கண் வட மேற்கே நாற்திசையும் புகழ் கமழும் நன் ஊராம் காரைநகர் என்னும் பொன்னூர் செய்த தவப் பயனால் 20.04.1913இல் வேலுப்பிள்ளை தங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனாக அவதரித்தார்:

இவருக்கு பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் அருளம்பலம் என்பதாகும். இல்லறம், துறவறம் இரண்டிலும் தன் வாழ்வை ஈடுபடுத்திய தொண்டர் சுவாமிகளுடைய வாழ்க்கை ஆராயத் தக்கது.

தனது 19ஆம் வயதில் இல்லறத்தை மேற்கொண்டு வாழ்வாராயினார். குடும்பத்தைப் பராமரிக்கும் வருமானத்திற்காக காரை — ஆலடியில் தேநீர்ச் சாலை ஒன்றை நிறுவராயினார். குடும்ப வருமானத்திற்கு உதவியதோடு பொது மக்களுக்கு உதவும் சாதனமாகவும் இது விழங்கியது. கிராம அரசியல், கலாசாரப் பணிகளிலும் ஈடுபட்டு வரும் காலத்தில் அமரருக்கு பல இடர்களும் நேரிட்டது, துன்பங்கட்கிடையில் இன்பமாக வாழும் பெருமை பெற்றவராக விழங்கினார்கள். அவரின் பணியாலும் சிறப்பாலும் அவரின் இயற்கைப் பெயரை மறந்து கற்றோரும், மற்றோரும் தொண்டர் ஐயா என்று அன்பாக அழைப்பராயினர். இல்லறத்தில் இருந்தபோது சமய வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் ஈடுபாடு கொண்டார்கள். கோவளத்தில் சமாதிகூடிய பேப்பர் சாமியரின் தொடர்பு தொண்டருக்கு சமய வாழ்க்கையில் அதிகம் ஈடுபட உதவியதோடு நல்லறிஞர் தொடர்பையும் ஏற்படுத்தியது. முன்னை நாள் இந்திய ஜனாதிபதி வி. வி கிரி, தேவதாஸ் காந்தி முதலாக இந்திய அறிஞர்களின் தொடர்புகள் வளர்ந்துகொண்டே வந்தன. வி. வி. கிரி காரைநகரில் பேப்பர் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் தங்கும்போதெல்லாம் தொண்டர் சுவாமிகளும் உடனுறைவதாக அறிய முடிகிறது. சித்தாந்த நூல்களைக் கற்பதிலும் அவற்றிற்கு விளக்கம் கொடுப்பதிலும் ஈடுபட்டுக்கொண்டார். இதன் மூலம் பட்டி தொட்டி யெங்கும் சிந்தாந்தம் சம்பந்தமான விரிவுரைகளை செய்துவந்தார்.

இந்நிலையில் 1972ஆம் ஆண்டு காஞ்சிபுரம் தென் மண்டல மெய்கண்டார் ஆதீன முதல்வரின் குருதீட்சை பெற்று துறவறம் பூண்டதன் மூலம் ஆதீனத்தினர் இவருக்கு ஸ்ரீல ஸ்ரீ ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் என்னும் திருநாமத்தையும், கஷாயத்தையும் வழங்கினர். இதன் மூலம் இலங்கையின் மெய்கண்டார் ஆதீன் முதல்வரானார்கள். அதனைத் தொடர்ந்து வேதாந்த சித்தாந்த வகுப்புகளையும் சொற்பொழிவுகளையும் நடத்திவரும் வேளையில் சமயத்தின் பெயரால் ஏற்படும் தவறுகளை நேராக கண்டிப்பார்: இவர் இதில் நக்கீரருக்கு ஒப்பாகவே விளங்கினார். இவ்வாறு சைவ சமய வாழ்வில் ஈடுபட்ட ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீமத் ஞானப்பிரகாச தம்பிரான் சுவாமிகள் சித்திரைத் திங்கள் பிரமோத வருஷம் 25.04.1990 இரவு 7.30 மணியளவில் கீரிமலை புனித ஸ்தலத்தில் சமாதியானார்கள். தொண்டர் சுவாமிகளை அறியாதவரில்லை.

அவர்கள் நாமம் வாழ்க!

சி. பொன்னம்பலம்

கோவளமும் குணவளமும்,
கொலுப் போன்ற கொட்டில்களும்
சீர்வளமும் குறையாமல் சிறப்பித்த
தொண்டர் ஐயா,
ஆதிமுதல் பேப்பர்தனை
அறிந்துமே சுற்றி நின்றீர்
மேதினியில் முருகேசன்
மேன்மை வழி தானடைந்தீர்
மெய்ஞான ஒளிபெற்ற
மெய்கண்ட வித்தகரே
எஞ்ஞான்றும் வாழ்வதற்கு,
என்றோ நீ வழி சமைத்தாய்

மு. திருநீலகண்டசிவம்

05076

MHURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 10-05-1990 வியாழக்கிழமை

முரசொலி அனுசரணையுடன் நடைபெறவுள்ள

## 115 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி விண்ணப்பங்கள்வந்துகுவிகின்றன

வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகமும் சிற்றூரவையும் இணைந்து முரசொலி அனுசரனையுடன் நடாத்தும் 115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வடகிழக்கு எங்கும் இருந்து பெருமளவு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளது, குறிப்பாக யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, மன்னார் பகுதிகளில் இருந்து அதிக வீரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

இப்போட்டி எதிர்வரும் 19ம் திகதி காலை 7 மணிக்கு புதுக்குளம் கழக மைதானத்தில் இருந்து ஆரம்பமாகி தாண்டிகுளம் சந்தியால் திரும்பி யாழ். வீதி வழியாக பரந்தன் சந்திவரை சென்று மீளவும் வவுனியா சென்று பள்ளி வாசல் வீதி - பொலிஸ் நிலைய வீதி ஊடாக ஆரம்ப இடத்தை அடையும்.

போட்டி ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை வீரர்களுக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன போட்டிக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்வதில் கழகத்தினதும் சிற்றூரவையினதும் அங்கத்தவர்கள் சுறுசுறுப்பாக இயங்கி வருகின்றனர்.

இப்போட்டியில் வெளியூரில் இருந்து பங்கு பற்றும் வீரர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டியில் முதல் பரிசு பெறும் வீரருக்கு முரசொலி தாபனத்தால் சாளி மோட்டார் சைக்கிள் பரிசளிக்கப்படும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு தொலைக்காட்சிப் பெட்டியும் (T,V) மூன்றாம் இடம் பெறுபவருக்கு புத்தம் புதிய சைக்கிள் ஒன்று வேறு பல பரிசில்களும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

### நேற்று...

இவரதுசடலம் உரிமைகோரப் படுவதற்காக யாழ்வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சடலத்தை இனங் கண்டு கொள்வதற்கு உதவுமாறு யாழ் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4)

### காணாமல்போன...

முதலமைச்சர் கருணாநிதி காணாமல் போன மீனவர்கள் சிலர் மீட்கப்பட்டுள்ளதாகவும் சிலர் இலங்கையில் கரை சேர்ந்திருப்பதால் அவர்களை மீட்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் சொன்னார்.

கடந்த திங்கள் வடமராட்சியில் நான்கு தமிழக மீனவர்கள் கரை சேர்ந்துள்ளமை தெரிந்ததே.

இவர்களை தற்போது மீண்டும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைப்பதற்கு விடுதலைப் புலிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

### யாழ்...

போதுமானஅளவுபோதனாசிரியர்கள் இன்மையால் ஒருசில பாடப்பகுதிகள் சிறப்பாக கற்பிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

### கிராம

தற்போது நடைபெறும் உணவு முத்திரை வழங்கும் வேலைகள் இதனால் பாதிப்படைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (03)

### கிராமசேவகர்...

வலர் புகார் செய்துள்ளார்.

இக்கல் வீச்சுக்கு பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட நால்வரின் ஜனசக்தி முத்திரை இரத்துச் செய்யப்பட்டமையே காரணமாயிருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது. எனினும் இச்செயலில் ஈடுபட்டவர்களை கண்டு பிடிக்க கிராம இளைஞர்களின் உதவியுடன் கிராம சேவை அலுவலர் கே.ரி.புவனேந்திரன் துரித விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

## காலமானார்

### திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டியைச் சேர்ந்த, தற்பொழுது சாவகச்சேரியில்வசிக்கும் திருமதி வேலுப்பிள்ளை சுந்தரம் 8.5.90ல் காலமானார், அன்னார் மு. க. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், மகேந்திரன் (செந்தில் அச்சகம், சாவகச்சேரி), மனோன்மணி (விவசாயப் போதனாசிரியை), தவமணி (ஆசிரியை, நம்புக்கணை) பராசக்தி (தாதி கொழும்பு ஆஸ்பத்திரி), மகாதேவன் (சட்டத்தரணி, குரும்பசிட்டி), சிவசக்தி, செல்லம்மா (சுவிஸ்) பரமேஸ்வரி (மிருக வைத்திய கந்தோர், சாவகச்சேரி) மனோகரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (உரிமையாளர், K. V. M. றெக்கோடிங் ஸ்ரூடியோ, சாவகச்சேரி), ஆகியோரின் அன்புத் தாயாரும்.கனகாம்பிகை, ரெறன்ஸ் (பாதுகாப்பு மேற்பார்வையாளர், கொழும்பு) பவானி (ஆசிரியை குரும்பசிட்டி), பத்மநாதன் K. V. M றெக்கோடிங் ஸ்ரூடியோ முகாமையாளர்) வசந்தகுமார் (சுவிஸ்), செகராசா (லிகிதர், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை, கொழும்பு), வதனி (சுவிஸ்) தவராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று 10.5.90 வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரின் சாவகச்சேரி இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

2 வது கற்குழி ஒழுங்கை
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
மு. க. வேலுப்பிள்ளை
05081

# தரம் குறைந்த தெற்கு உணவுப் பொருட்கள் வடக்கில் குவிப்பு

தென்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தரம் குறைந்த, பழுதடைந்த உணவுப் பொருட்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் தென்பகுதியில் மேற்கொள்ளப் பட்ட உணவுப் பரிசோதனை நடவடிக்கையின் போது 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட உணவுப் பொருட்கள் பழுதடைந்துள்ளது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இவ்வகையினுள் அடங்கும் உணவுப்பொருட்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும், இப்பொருட்களில் பொறிக்கப் பட்டுள்ள பாவனை எல்லைத் திகதி மறைக்கப் படுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (03)

### பேச்சுக்களால்...

லாம் என்ற நம்பிக்கை இன்னமும் எமது மக்கள் மத்தியிலிருந்து அகற்றப்படவில்லை.

இதனால் எமது மக்கள் ஆயுத வெறியர் என்று யாரும் நினைக்க கூடாது.

எமது மக்களின் உரிமையினை வேறு வழியில் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இன்னமும் தென்படவில்லை வவுனியா மாவட்டத்தினை எடுத்துக் கொண்டால் விமான விஸ்தரிப்பிற்காக எடுக்கப்பட்ட 355 ஏக்கர் நிலம் தமிழ் மக்களின் அனுமதியின்றிசுவீகரிக்கப்பட்டுஅந்த மக்களின் உடமைகள் அழிக்கப்பட்டு பலர் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே அன்றையஅகதிகளைஇன்னும் மீளக்குடியமர்த்த எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அம் மக்கள் இன்றும் இருக்க இடமின்றி அகதிகளாகவும் அனாதைகளாகவும் இருக்கின்றனர்.

பாவற்குளத்தில் உள்ள மகாவித்தியாலயத்தில் இலங்கை இராணுவ முகாம் அமைக்கப்பட்டு பாடசாலை கட்டிடம் தகர்க்கப்பட்டுள்ளது.

இது எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு தடையாக இருப்பது மட்டுமின்றி நேரடியான இராணுவ பயமுறுத்தலை வெளிப்படுத்துகின்றது.

கடந்த காலத்தில் பாவற்குளம் பிரதேசத்தில் வசித்த தமிழ் சிங்கள மக்கள் புரிந்துணர்வுடன் வாழ்ந்து வந்தார்கள் இதனை மனப்பூர்வமாக இதய சுத்தியுடன் வெளிப்படுத்துகின்றோம் இந்த சிங்கள மக்கள் திட்டமிட்ட ரீதியில் பாவற்குளம் பகுதியில் குடியமர்த்தப்பட்டவர்கள்.

இன்று மக்கள் மனதிலே ஒரு இராணுவ பயமுறுத்தல் இருப்பதினை தெளிவாக அவதானிக்க முடிகின்றது.

பாவற்குளத்தில் வசித்த தமிழ் சிங்கள மக்கள் அகதிகளாக சென்றார்கள் தற்போதையசமாதான கால கட்டத்தில் துரிதமாக சிங்கள மக்களை இரண்டு இலங்கை இராணுவ முகாம்களை அமைத்துக் கொண்டுஇராணுவஉதவியுடன்குடியமர்த்துகின்றனர்.

இந்த இலங்கை இராணுவ முகாம் அமைந்திருப்பதினால் தமிழ் மக்கள் அங்கு மீளவும் சென்று குடியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவை மட்டுமல்ல ஆலங்குளம் பாடசாலையில் இலங்கை இராணுவ முகாம்அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு படித்த மாணவர்கள் தமது கல்வியினை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டந்தில் 90 சத வீத மாணவர்கள் தமிழ் பேசும் மக்கள்.

ஆனால் கடமையாற்றுகின்ற அரச திணைக்கள அலுவலர்களில் கணிசமான அளவு சிங்கள உத்தியோகத்தர்களும் உள்ளனர்.

தமிழ் மொழி அமுலாக்கம் என்ற கூறிக்கொண்டும் தமிழ் மொழிக்கு தேசிய அந்தஸ்து என்றுசொல்லப்பட்டபோதும் உயர் மட்டத்திலிருந்து வரும் கடிதங்கள் சுற்றறிக்கைகள் இன்னமும் தனிச் சிங்களத்திலேயே வருகின்றது.

இத்தனை விடயங்களும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இலங்கை அரசிலிருக்கும் நம்பிக்கையினை அல்லது பேச்சுக்களினால் பிரச்சனை தீரும் என்ற நம்பிக்கை அற்றதாகி விட்டது:

இந்த நிலையில் சமாதான ஊர்வலம் தேவை அற்ற தொன்றாகவே நாம் கருதுகின்றோம் மக்கள் உண்மையானதொரு சமாதானத்தையே விரும்புகின்றனர். இப்போலித்தனமான ஊர்வலம் உலகத்திற்கு தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றனர் என்றதொரு மாயையை ஏற்படுத்துமே ஒழிய மக்கள் மனதில் உள்ள சந்தேகங்களை இந்தசமாதானஊர்வலங்கள் அகற்றாது

எனவே சமாதானத்தினை இதயசுத்தியுடன் விரும்புகின்றவர்கள் யாராகஇருந்தாலும் சரி செயல்ஊடாக மேற்கூறப்பட்ட ஒவ்வொரு விடயங்களையும் ஆழமாகச் சிந்தித்து செயல் ஆற்றினால் நாம்எதிர்பாக்கும் உண்மையானதொரு சமாதானத்தினை பெறமுடியும்.

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழ மக்களினால் தன்னிகர் இல்லாத தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் பிரபாகரன் அவர்களை இராணுவ,அரசியல் ரீதியாக ஏமாற்ற நினைத்த இலங்கை உளவுப்படை,முப்படை, இஸ்ரேல் உளவுப்படை, பிரித்தானிய உளவுப்படை, இந்திய உளவுப்படை அமைதிப்படை என்ற போர்வையில் வந்த அக்கிரமிப்பு படை அனைத்தும் தமிழீழ மக்களின் தலைவரின் தனித்துவமான போராட்ட வழிகாட்டலினாலும், இலட்சியப்பற்றினாலும், தெளிவான சிந்தனை ஆற்றலினாலும் அனைத்து சக்திகளையும் முறியடித்து எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை வெளிப்படுத்தியுள்ளது,

கடந்த கால வரலாற்றை பாடமாக வைத்துக்கொண்டு இனி மேலும் தமிழீழ தலைவரையோ, மக்களையோ ஏமாற்றலாம் என்று எந்த ஒரு அரசும் சரி நினைக்குமானால் அதுவே எமது தமிழீழத்திற்கான அடிக்கல்லாக அமையும்.

எனவே இன்றைய இந்த காலகட்டத்தினை சரியாக இலங்கை அரசு பயன்படுத்தி உண்மையானதொரு சமாதானத்திற்கான வழியினை ஏற்படுத்துவதால் ஒவ்வொரு மக்களும் எதிர் பார்க்கின்ற அமைதி,சமாதானம்,மகிழ்ச்சியான வாழ்வு ஏற்படும் என்பதினையும் கூறிவைக்க விரும்புகின்றோம். (11)

## வெள்ளவத்தை குண்டுவெடிப்பு மக்கள் காயமடையவில்லை

நேற்று வெள்ளவத்தைப் பகுதியில் குண்டு ஒன்று வெடித்தது. வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள ஒரு மதுபானக் கடையிலேயே மேற்படி குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாக தெரிவிக்கப் படுகிறது, குண்டு வெடிப்பினால் எவரும் காயமடையவில்லை எனவும் தனிப்பட்ட பகைமையே குண்டு வீச்சுக்கு காரணம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மறைந்த சாம் தம்பிமுத்துவின் இறுதிக்கிரியைகள் இன்று

மறைந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர் சாம் தம்பிமுத்துவின் இறுதிக்கிரிகைகள் இன்று கனத்தை மயானத்தில் நடைபெறும்.

### போதனை...

னால் சில விஷட சொற்பொழிவுகள் சிங்கள மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப சிங்கள மொழியில் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

தாங்கள் விரிவுரையாளர்களிடம் எங்களுக்கும் சிங்களம் தெரியாது ஆங்கிலத்தில் விரிவுரையாற்றவும் என்று கூறினாலும். எங்கள் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.மேலும் இப்பயிற்சிக் கலாசாலையில் வடகிழக்குப் பகுதியைச் சேர்ந்த எந்த ஒரு விரிவுரையாளரும் இல்லை, அப்படி இருந்திருந்தால் எங்கள் குறை ஓரளவு தீர்ந்திருக்கும் என்று மிகவும் கவலையுடன் தெரிவித்தார்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 10-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது